மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

பேருந்து வசதி

***4938—திரு. ப. கார்த்திகேயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி பகுதியிலிருந்து அடுக்கம்பாறையிலுள்ள அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது ஆற்காட்டிலிருந்து சத்துவாச்சாரி வழியாக அடுக்கம்பாறை அரசு பொது மருத்துவமனைக்கு நகரப் பேருந்து மூலமாக 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த நடைகளில் சராசரி பயணிகளின் அடர்வு 32 சதவிகிதம் என்ற குறைந்த அளவிலேயே இருக்கிறது. எனவே, தற்போதைய பேருந்து வசதியே போதுமானதாகும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது தமிழினத் தலைவர் அவர்களையும், தளபதி அவர்களையும் வணங்குகிறேன். நான் வசிக்கின்ற வேலூர் தொகுதியிலிருந்து சத்துவாச்சாரி வழியாக அடுக்கம்பாறை அரசு பொது மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், ஆற்காட்டிலிருந்து பேருந்து வருகிறவரை நோயாளிகள் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. சத்துவாச்சாரியில்*

ஏழை, எளிய மக்கள் அதிகமான எண்ணிக்கையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கல் உடைப்பவர்கள், மேஸ்திரி வேலை செய்பவர்கள், பீடித் தொழிலாளிகள், நெசவாளர்கள் போன்றவர்கள், வேறு இடத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், அங்கிருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு வந்துதான் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால், சத்துவாச்சாரி– அடுக்கம்பாறை தனி டவுன் பஸ் இயக்கினால் நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற வழித்தடமான சத்துவாச்சாரியிலிருந்து வேலூர் நகரப் பேருந்து நிலையத்திற்கு 3 கி.மீ. தூரம்தான் இருக்கிறது. அந்த வழித்தடத்திலே ஐந்து நிமிடங்களுக்கு ஒரு பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, வேலூர் பேருந்து நிலையத்திலிருந்து அடுக்கம்பாறை அரசு பொது மருத்துவமனைக்கு ஐந்து நிமிடங்களுக்கு ஒரு பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்த வழித் தடத்திலே இயங்கக்கூடிய பேருந்துகளில் பயணிக்கின்ற பயணிகளின் அடர்வு மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், தற்போது இருக்கக்கூடிய பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்த வழித் தடத்திலே தற்போது இயக்கப்படுகின்ற பேருந்து வசதிகளே போதுமானது என்பதால், அந்த வழித் தடத்திலிருந்து பேருந்து இயக்குவதற்குத் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து முடிவெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, காட்பாடி–பாகாயம், பாகாயம்–காட்பாடி வழித்*

தடத்தில் 1 ஆம் நம்பர் மற்றும் 2 ஆம் நம்பர் பேருந்துகள் செல்கின்றன. 1 ஆம் நம்பர் பேருந்து Voorhees College வழியாக தொரப்பாடி, பாகாயம் வரை சென்று, திரும்பும் வழியில் சங்கரன்பாளையம், சாயிநாதபுரம் மற்றும் ஆரணி ரோடு வழியாக வரும். பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக பள்ளம் தோண்டியபொழுது, இந்த வழித் தடத்தில் பேருந்துகள் வரவில்லை. 1 ஆம் நம்பர் மற்றும் 2 ஆம் நம்பர் பேருந்துகள் கண் ஆஸ்பத்திரி வழியாகப் பாகாயம் சென்று பின்னர் காட்பாடிக்கு வரும். தற்பொழுது இந்தப் பேருந்துகள் சாயிநாதபுரத்திலேயே cut செய்து, லஷ்மி தியேட்டர் வழியாகச் சென்றுவிடுகின்றன. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சத்துவாச்சாரியில் பாழடைந்த நிலையில் ஒரு திருமண மண்டபம் 1 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. தனியார் திருமண மண்டபங்களில் ரூ.1 இலட்சம் முதல் ரூ.2 இலட்சம் வரை வாடகை வசூலிக்கிறார்கள். அரசு போக்குவரத்துத் துறையின்மூலம் அமைக்கப்பட்டுள்ள இந்தத் திருமண மண்டபத்தினை பழுதுபார்த்து, சிறப்பான முறையில் பயன்பாட்டிற்குக் கொண்டு வர ஏற்பாடு செய்தால் அரசுக்கு வருமானம் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்த வழித்தடத்தில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெறும்போது மாற்று வழியில் இயக்கப்பட்ட பேருந்துகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வழித்தடத்திலே இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அங்குள்ள திருமண மண்டபத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அதுகுறித்து சம்பந்தப்பட்ட போக்குவரத்துத்

துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, அதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயத்திலிருந்து சென்னைக்கு இரவுப் பேருந்து இயக்குவது நிறுத்தப்பட்டது. அது மீண்டும் இயக்கப்படுமா என்ற கேள்வியை நான் கேட்டிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தினசரி இரவு 8–00 மணிக்கு அதி நவீன சொகுசுப் பேருந்து இயக்கப்படுவதாக ஒரு தகவலை இந்த அவையில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைய தேதி வரை அந்தப் பேருந்து இயக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. எனவே, நான் சொன்னதை நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, நிறுத்தப்பட்ட திருமயம்–சென்னை பேருந்து மீண்டும் இயக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமயத்திலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். தமிழகத்திலிருக்கக்கூடிய அனைத்து பெருநகரங்களிலிருந்தும் சென்னைக்குப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்த திருமயம் வழித் தடத்தை ஆய்வு செய்து அந்த பேருந்துகள் இல்லாமலிருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையைப் பெற்று, அந்த வழித்தடத்தில் சென்னைக்குப் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். உட்காருங்கள். வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

120—

தங்கும் விடுதி

***680—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி தொகுதி, சுசீந்திரத்திலுள்ள அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தற்காலிக தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி தொகுதி, சுசீந்திரத்திலுள்ள அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*